கத்தாரில் கைது செய்யப்பட்ட 8 இந்தியர்கள் வழக்கில் தீர்ப்பு

அக்டோபர் 26, 2023

அல் தஹ்ரா நிறுவனத்தைச் சேர்ந்த 8 இந்திய ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வழக்கில் கத்தார் முதன்மை அமர்வு நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கியுள்ளதாக எங்களுக்கு முதல்கட்டத் தகவல் கிடைத்துள்ளது.

மரண தண்டனையின் தீர்ப்பால் நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளோம். மேலும் விரிவான தீர்ப்புக்காக காத்திருக்கிறோம். நாங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சட்டக் குழுவுடன் தொடர்பில் இருக்கிறோம், மேலும் அனைத்து சட்ட விருப்பங்களையும் ஆராய்ந்து வருகிறோம்.

இந்த வழக்குக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம், அதை நெருக்கமாகப் பின்பற்றுகிறோம். தூதரக மற்றும் சட்ட உதவிகளை நாங்கள் தொடர்ந்து வழங்குவோம். கத்தார் அதிகாரிகளிடமும் தீர்ப்பை எடுத்துக் கூறுவோம்.

இந்த வழக்கின் நடவடிக்கைகள் ரகசியமாக இருப்பதால், இந்த நேரத்தில் மேற்கொண்டு எந்த கருத்தையும் கூறுவது சரியாக இருக்காது.

புது தில்லி
அக்டோபர் 26, 2023